உள்ளது.

அபதுல்வகாப், வக்கீல் சுந்தரம், பொருளாளர்

கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

### இந்தியாவில் முதன் முறையாக

# கோவை கங்கா மருத்துவமனை சார்பில் ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை துவக்கம்

கோவை, ஜூன்.25-

கோவை கங்கா மருத்துவமனை சார்பில் இந்தியாவின் முதல் மருத்துவமனை சார்ந்த ஏர் ஆம்புலன்ஸ் சேவை 25-ம் தேதி கோவை வட்டம் பாளையத்தில் உள்ள கங்கா நர்சிங் கல்லூரி வளாகத் தில் துவங்குகிறது. இதனை இந்திய விமானப் படை தளபதி பி.எஸ்.தனோவா துவக்கி வைக்கிறார். இவ்விழாவில் நொய்டா வருமான வரித் துறை கமிஷனர் எஸ்.கே. சுவத்சவா ஏர் மார்ஷல் அனில் பெகல், (டைரக்டர் ஜெனரல். மெடிக்கல் சர்வீஸ் (ஏர்போர்ஸ்)), மாவட்ட ஆட்சியர் ஹரிஹரன், கோவை போலீஸ் கமிஷ்னர் அமல்ராஜ், மேற்கு மண்டல ஐ.ஜி. பாரி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இதுகுறித்து கங்கா மருத்துவமனையின் இயக்குநர்கள் டாக்டர் எஸ்.ராஜசபாபதி மற்றும் டாக்டர் எஸ்.ராஜசேகரன் ஆகியோர் கூறியதாவது, கங்கா ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் இரண்டு என்ஜின்களைக் கொண்ட இத்தாலி நாட்டினை சேர்ந்த ஹெலிகாப்டர் ஆகும். இந்த ஹெலிகாப்டர் மற்ற தலைவர்கள் அடிக்கடி வெளி ஊர்களுக்கு பயணம் செல்லும் ஹெலிகாப்டர் போல் அல்லாமல், ஆகாய மார்க்கமாக மருத்துவமனைக்கு செல்லும்- நோயாளிகளுக்காகவே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஆம்புலன்ஸ் ஆகும். இந்த ஆம்புலன்ஸ் போல் வடிவமைக்கப்பட்ட ஹெலிகாப்டர் முதன் முதலாக இந்தியாவில் பார்முலா 1 கார் ரேஸ் நடைபெற்றபோதே கொண்டு வரப்பட்டது.

ஹெலிகாப்டரில் நோயாளிக்கு தேவை யான படுக்கை வசதி, ஆக்சி ஜன் வசதி, பல்ஸ், இரத்தம் மற்றும் இரத்த அழுத்தத்தின் அளவுகளைக் கண்டறியும் இயந்திரங்கள், பயணத்தின் போது தேவையான வெண்டிலேட்டர் மற்றும் இதய துடிப்பை சீரமைத்தல் முதலிய வசதிகளும் உள்ளன. நான்கு மருத்துவத் துறையை சார்ந்தவர்களின் சிவில் யேவியேஷன் துறைக்கு தேவையான தனித்துவ பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். இத்தனித்துவ பயிற்சி அளிக்கப்பட்டவர்களில் ஒருவர் அல்லது மருத்துவர் ஒருவர் நோயாளியுடன் எப்போதும் பயணிப்பர். ஹெலிகாப்டரை ஒட்டுவதற்கு இரு பைலட்டுகள் தயாராக இருப்பதுடன் நோயாளிகளுடன் மருத்துவத் துறையை சேர்ந்தவர்களும் பயணம் செய்வதற்கு ஹெலிகாப்டரில் வசதி செய்யப்பட்டுள்ளது. ஒருமுறை எரிபொருள் நிரப்பினால் 400 கிலோ மீட்டர் தொலைவு வரை பறக்கலாம். ஆகவே தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா வரை சென்று வர முடியும். இந்த ஹெலிகாப்டரை ஓ.எஸ்.எஸ். நிறுவனம் மூலம் கொண்டு வரப்பட்டது. இந்த ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் கங்கா நர்சிங் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிபேடில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

கங்கா ஹெலிபேடு (தளம்) டிஜிசிஏ – வினால் அனுமதிக்கப்பட்டதாகும். கங்கா ஹெலிபேடு மட்டும் தான் தென் மாநிலத்திலேயே டிஜிசிஏ – வினால் தனியார் ஹெலிபேடிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரை கிடைக்கும். இரண்டு விமான நிலையத்திற்கு இடையில் இந்த ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸை, பைலட்டுகளுக்கு இரவில் ஒட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு ஊரில் தற்காலிக ஹெலிபாட் தமிழ்நாடு மற்றும் தென்மாநிலங்களில் இருக்கும். இதை கண்டறிவதற்குண்டான ஏற்பாடுகள் நடந்து கொண்டுள்ளன. இந்த ஏற்பாடு முடிவடைந்தால் மிகப்பெரிய அளவில் நோயாளிகளுக்கு பயன்படும். மேலும் அருகாமையில் உள்ள ஊட்டியிலிருந்து ரோட்டில் வருவதற்கு குறைந்தது 3 முதல் 4 மணி நேரம் ஆகிறது. ஆனால், இந்த ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் மூலம் 10 நிமிடத்தில் இலக்கை அடைந்து விடலாம். இந்த கங்கா ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை கங்கா மருத்துவமனை நோயாளிகளுக்கு மட்டுமல்லாமல் இந்த பகுதியில் உள்ள மருத்துவமனையின் தேவைக்கும் இந்த சேவை பயன்படும். இந்த ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை ஆரம்பித்ததின் மூலம் தென் மாநிலங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். விபத்து நோயாளிகளுக்கு மட்டுமில்லாமல், இந்த ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை இதயம், தலை மற்றும் குழந்தைகள் அவசர மருத்துவ தேவைக்கும், தானம் கொடுக்கபட்ட உடல் உறுப்புகளை தேவைப்பட்ட மருத்துவமனைக்கு எடுத்து செல்லவும் உதவியாக இருக்கும். இந்த ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை ஒரு மருத்துவமனையினால் நடத்தப்படுவதால் இந்த சேவை திறன்பட இருப்பதோடு குறைந்த செலவை தேவையான நோயாளிகளுக்கு கொடுக்கும்.

கோவை கங்கா மருத்துவமனை விபத்து பிரிவு, எலும்பு முறிவு சிகிச்சை பிளாஸ்டிக் மற்றும் மைக்ரோ அறுவை சிகிச்சை மூலம் துண்டிக்கப்பட்ட கை, கால்களை இணைத்தல் மற்றும் தீப் புண்களை குணப்படுத்துதல் போன்ற சேவைகளை 1991 முதல் செய்து வருகிறது. 25 வருட சில்வர் ஜூப்லி ஆண்டில் இந்த சேவை துவக்கப்படுவதால் மருத்துவமனை இயக்குனர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது என்று கூறினார்கள்.

### நிலையங்களில்

## யிற்சிக்கான

## க்டர் அறிவிப்பு

கலந்தாய்வு சேர்க்கையில் கலந்துகொண்டு, தங்கள் விருப்பமுள்ள தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவுகளை தெரிவு செய்து, பயிற்சியில் சேர்ந்து கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர் கேட்டுக்கொள்கிறார்.

